**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.478/2018**

| | | |
|---|---|---|
| **NAME** | : | கல்பனா |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 07.07.2023.**

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

என் கணவர் 12ம் வகுப்பு முடித்துள்ளார். அந்த கல்வி சான்றாவணங்கள் வீட்டில் உள்ளது. அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் உண்மையான பிறப்பு தேதி, மாதம், வருடம் தெரிந்துவிடும் என்பதால் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் கணவர் மிலிட்டரியில் இருந்து ஓய்வு பெற்று அம்பாள் ஏஜென்சியில் கிளினீங் சூப்பர்வைசராக வேலை பார்த்தார். வேலை செய்ததற்கான நியமனக் கடிதம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேலை செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சேலரி சான்று என் கணவர் இறந்தபிறகு சென்று வாங்கியது என்றால் 18.07.2017 அன்று சென்று வாங்கி வந்தேன். எந்த மாதத்திற்கான சான்று என காணப்படவில்லை. என் கணவர் இறந்ததற்கான வழக்கு போட்டுள்ளேன். அதனால் சம்பளச் சான்று தேவை என கேட்டு வாங்கினேன். இந்த ஆவணம் யார் கொடுத்தார்களோ அவர்களை வைத்துதான் குறியீடு செய்யப்படவேண்டும் என்பதால் இந்த ஆவணம் ம.த.சா.ஆ.12 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பென்ஷன் அவர் வாங்கும் விவரம் குறித்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். ஒரிஜினல் ஆவணம் என்னிடம் உள்ளது. ஜெராக்ஸ் தாக்கல் செய்துள்ளபடியால் இந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் ஒரிஜினல் என்னிடம் உள்ளது. என் கணவர் இறந்தபிறகு பென்ஷன் 50சதவிகிதம் வருகிறது. எனக்கு ரூ.9,000/-ம் பென்ஷன் வருகிறது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எனக்கு அதிகமான பென்ஷன் வருகிறது என்றாலும் அது தெரிந்துவிடும் என்பதால்தான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு தனிப்பட்ட பென்ஷன் பாஸ்புக் கிடையாது. வங்கி மூலமாக அந்த தொகை வருகிறது. அதற்கான என்ட்ரி வங்கி பாஸ் புக்கில் உள்ளது. அந்த பாஸ்புக்கை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பாஸ்புக் ஜெராக்ஸ் காப்பி கொடுத்துள்ளேன். பாஸ்புக்கின் முதல் பக்கத்தை மட்டும்தான் கொடுத்துள்ளேன். என்ட்ரிசை பார்த்தால் எவ்வளவு பணம் வாங்குவது தெரிந்துவிடும் என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை. ஆவணங்களின் அடிப்படையில்தான் சாட்சி சொல்கிறேன். என் கணவர் மீதுதான் தவறு என எப்ஐஆர் போடப்பட்டுள்ளது என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை என் கணவர் மீதுதான் போடப்பட்டுள்ளது. தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது. தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் ஏதாவது மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

.....2

புகார் கொடுக்கும்போது நான் இல்லை. என் கணவர் மீது தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது சம்பந்தமாக நான் எந்த தனி வழக்கும் தாக்கல் செய்யவில்லை. என் கணவரின் சகோதரர் கொடுத்த புகாரின் பேரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என தெரியாது. 20.07.2017ல் என் கணவர் இறந்ததினால் சார்ஜ் அபேட் ஆகியுள்ளது என்றால் தெரியாது. விபத்து நடந்த உடனோ அல்லது சார்ஜ் அபேட் செய்வதற்கு முன்னாலோ பொய்யாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக சார்ஜ் எல்லாம் அபேட் ஆன பிறகு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக 07.02.2018ல் ஒரு மனு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.19 ஆவணம் சார்வு செய்யப்படாமல் திரும்ப அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரி. 07.02.2018ல் கொடுத்துள்ள மனு பொறுத்து ஏதாவது மேல்நடவடிக்கை எடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. என் கணவர் தான் அதிவேகமாக இரு சக்கர வாகனத்தில் சென்று முன்னால் சென்ற எதிர்மனுதாரரின் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. நான் நஷ்டஈடு கிடைக்க வேண்டும் என்பதற்காக முன்னுக்கு பின் முரணாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவருக்கு இரு சக்கர வாகனம் ஓட்ட லைசன்ஸ் உள்ளது. என் கணவருக்கு விபத்தில் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரி. என் கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட வாய்ப்பே இல்லை என்றால் சரியல்ல. அவர் தலையில் தலைக்கவசம் அணிந்திருந்தார். நான் தற்போது வழக்கிற்காக தலைக்கவசம் அணிந்திருந்தார் என கூறுகிறேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் என் கணவர்தான் என்றாலும், மனு தள்ளுபடியாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.